## 29 மாயப்பசுவை வதைத்த படலம்

சமணர்கள் ஒன்று சேர்ந்து பாண்டியனை வெல்ல அனுப்பிய மதயானையும், விஷப்பாம்பினையும் பாண்டியன்கொன்றதால்வேறுசூழ்ச்சிசெய்யஎண்ணி னர். வைணவர்கள்பசுவதைசெய்யமாட்டார்கள்என்றுஅறிந்தசமணர்கள்முன் போலவே பெரியயாகம் ஒன்றுசெய்தார்கள். அதினின்று பசுவடிவம் கொண்ட அவுணன் தோன்றினான். அவனை விட்டு மதுரையை அழிக்க ஏவினர் சமணர்கள்.

அந்தமாயபசுவானதுஅதிவேகமாய்கண்டவர்அஞ்சும்படிமதுரையைஅழிக்க வந்து. இதனை அறிந்த பாண்டியன் சோமசுந்தரக் கடவுளிடம் காக்கும் படி வேண்டினான். ஐயன் திருவுள்ளம் கொண்டு நந்தியை, சமணர்கள் அனுப்பிய பசுவை வென்று வர அனுப்பினார். நந்தி தனது அடியினால் நிலத்தைக் கிளறி, அண்டத்தையும் எட்டுத் திக்கையும் மறைக்குமாறு புழுதியை எழுப்பியது. கண்களில் தீயைச் சிந்திய படி வேகமாக நடந்தது. அதன் அழகில் மயங்கிய பசு அதன் மீது இச்சைக் கொண்டு, காமம் மிகுந்து வீரியத்தையும் விட்டு கீழே வீழ்ந்து இறந்தது.

மதுரை மக்கள் கொடிய பசுவிடமிருந்து தப்பியதை எண்ணி மகிழ்ந்தனர். அனந்தகுணன் தன் குலபூஷணனிடம் அரசாட்சியை ஒப்படைத்து சிவபதம் அடைந்தான்.

### பல்லவி

பசுவதை செய்திட மாட்டார்கள் எனச் சூதாய்,
சமணர்களைக் கொண்டு யாகம் செய்து மாயப்

### அனுபல்லவி

பசுவை ஏவி பாண்டிய நாட்டையும் அரசனையும்
அழித்திடவே சோழன் எண்ணங் கொண்டான்

### சரணம்

உந்தன் ஆணையால் திருநந்தியும் அந்தப் பசுவை
உந்தி உந்தித் தள்ளி தொந்திரைச் செய்த பின்
அந்த முகுந்ததன் அழகினைக் காட்டி காம
ஆசை மிகக் கொண்டு ஆவும் அழிந்திடச் செய்தாயே